தேர்வு நடத்தப்பட்டு, நமக்கு பட்டியல் அனுப்பப்பட்டது. அதிலே ஏற்கெனவே கூட்டுறவுத் தணிக்கைத் துறையில் பணி யாற்றிக் கொண்டிருக்கும் இளநிலை ஆய்வாளர்கள் 355 பேர் இருக்கிறார்கள். பால் கூட்டுறவு தணிக்கைத் துறையிலே பணி யாற்றிக் கொண்டிருக்கிற இளநிலை ஆய்வாளர்கள் 35 பேர் இருக் கிறார்கள். தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தின் ஆணையின்படி அவர்கள் அட்மினிஸ்ட்ரேட்டீவ் டிரிபியூனல் சென்று ஆணையை பெற்றவர்கள்—ஏற்கெனவே 152 பேருக்கு வேலை கொடுத்து விட்டோம். மீதமுள்ள 693 பேருக்கு இந்த சனவரி மாதத்தில் நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஒப்புதலோடு 693 பேருக்கும், அவ்வளவு பேருக்கும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தபோது அங்கே கூட்டுறவுத் துறையிலே இளநிலை ஆய்வாளர்களாகவும், தனி அலுவலர்களாகவும் இருந்த ஆயிரம் நபர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தார்கள். அவர்களுக்கு மீண்டும் பணிகொடுக்க வாய்ப்பு அளித்தமைக்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக மாண்புமிகுகூட்டுறவுத்துறைஅமைச்சர்அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 618, திருமதி வி. ஜி. மணிமேகலை. மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

618—

ஒருங்கிணைந்த எண்ணெய் வித்துக்கள் மேம்பாட்டுத் திட்டம்.

***3895— திருமதி வி. ஜி. மணிமேகலை :**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதிய ஒருங்கிணைந்த எண்ணெய் வித்துக்கள் மேம் பாட்டுத் திட்டம் அருப்புக்கோட்டைத் தொகுதிக்கும் விரிவு படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கடந்த இரண்டு நாட்களுக்கு முன் னால் நடைபெற்ற வேளாண்மை மானியக் கோரிக்கையில் பதில் அளிக்கும்போது தமிழகத்தில் நீலகிரி மாவட்டம், கன்னியாகுமரி

மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் ஒருங்கிணைந்த எண்ணெய் வித்து மேம்பாட்டுத் திட்டம் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன்.

திருமதி வி. ஜி. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் எல்லா மாவட்டங்களிலும் இந்த ஒருங்கிணைந்த எண்ணெய் வித்து மேம்பாட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள், குறிப்பாக காமராஜர் மாவட்டத்திலே என்னுடைய தொகுதியான அருப்புக்கோட்டை மிகவும் வறட்சியான தொகுதி, அங்கே உள்ள மக்கள் அதிகமான படிப்பறிவு இல்லாத நிலையிலே எண்ணெய் வித்து மேம்பாட்டுத் திட்டத்தை அங்கே கொண்டு வந்தால் நலமாக இருக்கும். சூரியகாந்தி, ஆமணக்கு போன்ற எண்ணெய் வித்துக்கள் பயிரிட அதிகமான தண்ணீர் தேவையில்லை. ஆகவே, என்னுடைய தொகுதியான அருப்புக்கோட்டையில் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவார்களா என்றுதான் பேரவைத் தலைவர் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்தில் நிலக்கடலை 12,000 எக்டேரிலும், எள் மற்றும் சூரியகாந்தி எண்ணெய் வித்துக்கள் எட்டாயிரம் எக்டேரிலும் பயிரிடப்பட்டு வருகின்றன, காமராஜர் மாவட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டுக்கு இந்த ஒருங்கிணைந்த எண்ணெய் வித்துக்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு 9.714 இலட்சத்தை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள், அதிலும் குறிப்பாக அருப்புக்கோட்டை தொகுதிக்கு மட்டும் மூன்று இலட்சத்தை புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்,

முற்பகல் 10-20

திருமதி வி. ஜி. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்னுடைய அருப்புக்கோட்டை தொகுதிக்கு இந்த எண்ணெய்வித்து மேம்பாட்டுத் திட்டத்திலே 3 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்ததற்கு என் தொகுதி மக்களின் சார்பாக எனது நன்றியை அவர்களுடைய பொற்பாதங்களில் காணிக்கையாக்குகின்றேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண், 619.

திரு. வி. கே. இலட்சுமணன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

619—

மாற்றளிப்பு ஆவணம் மூலமாகப் பதிவு செய்யப்படும் மனைகளுக்கு முத்திரைக் கட்டணம் ரத்து செய்ய நடவடிக்கை,